டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 27.03.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 230 - Madurai | Online Edition

# தமிழகத்தில் ஒரு சில பகுதிகளில் லேசான மழை வாய்ப்பு!

சென்னை, மார்ச் 26

தமிழகத்தில் மார்ச் 28 முதல் ஏப்ரல் 1 ஆம் தேதி வரை ஓரிரு இடங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் இன்று வறண்ட வானிலை நிலவக்கூடும். மார்ச் 28 முதல் 30 ஆம் தேதி வரை மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மார்ச் 31, ஏப்ரல் 1 ஆம் தேதிகளில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதியிகளில் மார்ச் 30 ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 3 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக் கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# காய்கறிப் பயிர்களுக்கான இயற்கை விதை நேர்த்தி முறைகள்

ஊட்டி, மார்ச் 26

நீலகிரி மாவட்டத்தில் பிரதானமாக பயிரிடப்படும் காய்கறி விதைகளை இயற்கை முறையில் விதை நேர்த்தி செய்வதன் மூலம் நோய்களை கட்டுப்படுத்தி விதைகளின் தரத்தை உயர்த்தி நஞ்சில்லாமல் அதிக மகசூல் பெற்று விவசாயகள் பயன் பெறலாம். மேலும், விதை நேர்த்தி மூலம் தரமான விதைகள் கிடைப்பதால் வயல்களில் விதைக்கும் விதையின் அளவும் குறிப்பிடத்தக்க அளவு குறைக்கப்பட்டு இடுபொருள் செலவை குறைக்கலாம்.

## நீர்/திரவ விதை நேர்த்தி

விதைகளை தண்ணீரை கொண்டு இரு முறைகளில் விதை நேர்த்தி செய்யலாம். முதலாவதாக, விதைகளை நீரில் 8 முதல் 12 மணி நேரம் ஊற வைப்பதன் மூலம் விதையின் உடலியல் காரணிகள் தூண்டப்பட்டு முளைப்புத் திறன் வேகம் எடுத்து, அனைத்து விதைகளும் சீராக முளைப்பது உறுதி செய்யப் படுகிறது. இரண்டாவதாக, 55°C வெப்பம் உள்ள நீரில் 20 முதல் 30 நிமிடம் விதைகளை ஊற வைப்பதால், விதைகளின் மேல் பரப்பிலும் விதை தொல்லியின் அடியிலும் இருக்கும் நோய் ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் அழிக்கப்பட்டு விதை மூலம் பரவக்கூடிய நோய்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இம்முறையில் விதை நேர்த்தி செய்யும் போது நீரின் வெப்பம் 55°C-யை மிகாமல் இருப்பது அவசியம், இல்லையேல் அதிக வெப்பத்தின் காரணமாக விதைகள் சேதமடைந்து முளைப்புத்திறன் பாதிக்கப்படும்.

3 நாட்கள் நன்கு புளித்த மோரில் விதைகளை நன்றாக கலந்து 30 நிமிடம் ஊற வைத்து பின் நிலலில் உலர்த்தி விதைப்பதால் விதைகள் சீராகவும் வீரியமாகவும் முளைப்பதை காண முடியும். மேலும் 2% ஜீவாமிர்தம் அல்லது பஞ்சக் காவியாவுடன் 6 மணி நேரம் ஊற வைத்து விதைப்பதன் மூலம் பயிர்களின் நோய் எதிர்ப்பு திறன் தூண்டப்பட்டு சீராக முளைப்பது கண்டறியப்பட்டுள்ளது.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

## உயிரியல் சார்ந்த விதை நேர்த்தி

உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான ட்ரைக்கோடெர்மா மற்றும் சூடோமோனாஸ் ப்லோரசன்ஸ் அல்லது பேசிலஸ் சப்டிலீஸ் ஆகியவற்றை 1 கிலோ விதைக்கு தலா 4 கிராம் வீதம் நன்றாக கலந்து விதைப்பதால் பயிர்களை தாக்கக் கூடிய நோய்களை நீண்டகாலம் கட்டுப்படுத்தலாம்.

மேலும் உயிர் உரமான அசோஸ்பைரில்லம் 1 ஹெக்டர் விதைக்கு 600 கிராம் என்ற வீதம் வடிகட்டி ஆற வைத்த கஞ்சியுடன் கலந்து 30 நிமிடம் ஊற வைத்து நிழலில் உலர்த்தி விதைப்பதன் மூலம் யூரியா இடுவதை குறைத்து மகசூலை பெருக்கலாம்.

மேலும், குறிப்பாக உயிரியல் விதை நேர்த்தி செய்த விதைகளுக்கு இரசாயன விதை நேர்த்தி செய்யக்கூடாது. மேலே குறிப்பிட்ட இயற்கை முறைகளை பயன்படுத்தி விதை நேர்த்தி மூலம் நஞ்சில்லா உணவை உற்பத்தி செய்யலாம்.

விதைப் பரிசோதனை

விதை விநியோகம் செய்பவர்கள் மற்றும் விவசாயிகள் தாங்கள் இருப்பு வைத்துள்ள விதைகளின் புறத்தூய்மை, ஈரப்பதம் மற்றும் முளைப்புத்திறன் ஆகியவற்றை பரிசோதனை செய்து விவரங்கள் பெற, உதகை, ரோஸ் கார்டனில், தோட்டக் கலை இணை இயக்குநர் வளாகத்தில் அமைந்துள்ள விதைப் பரிசோதனை நிலையத்தில் தங்கள் முழு முகவரியுடன் பகுப்பாய்வு கட்டணமாக ரூ.80/- செலுத்தி போதிய அளவு விதை மாதிரிகளை கொடுத்து பகுப்பாய்வு முடிவுகளை பெற்று பயன் பெறுமாறு எஸ்.நவீன், வேளாண்மை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், உதகை அறிவுறுத்தினார்.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மண்ணின் நீர் வங்கி

# ஹைட்ரோஜெல்கள் எவ்வாறு மண்ணின் நீர் தாங்கும் திறனை அதிகரிக்கின்றன?




நீர்மை மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களில் நீரைச் சேமிப்பது மிக முக்கியம். இதற்கு நவீன தீர்வுகளில் ஒன்று ஹைட்ரோஜெல்கள் (Hydrogels). இவை மண்ணில் நீரை உறிஞ்சிக்கொண்டு, தாவரங்களுக்கு மெதுவாக வெளியிடும் திறன் கொண்டுள்ளதால் விவசாயத்தில், மண்ணின் நீர் வங்கி, என்ற புகழைப் பெற்றுள்ளன. இந்த தொழில்நுட்பம் வேளாண் வேதியியல் துறையில் முக்கிய முன்னேற்றமாக கருதப்படுகிறது.

**ஹைட்ரோஜெல் என்றால் என்ன?**

ஹைட்ரோஜெல்கள் என்பது பாலிமர் அடிப்படையிலான பொருட்கள். இவை நீரை உறிஞ்சி, ஜெல்லி போன்ற அமைப்பாக மாறும் தன்மை கொண்டவை. சில ஹைட்ரோஜெல்கள் தங்களின் எடைக்கு 100-500 மடங்கு நீரை உறிஞ்சிக் கொள்ளக் கூடியவை.

**வகைகள்**

1. செயற்கை ஹைட்ரோஜெல்கள் (Synthetic) - Acryloamide, Polyacrylate அடிப்படையிலானவை.

2. இயற்கை ஹைட்ரோஜெல்கள் (Natural/Biodegradable) – இவை தாவரங்கள், உயிரினங்கள் அல்லது இயற்கை மூலப் பொருட்களிலிருந்து பெறப்படும் பாலிமர்களால் உருவாக்கப் படும் ஹைட்ரோஜெல்கள். செல்லுலோஸ் (Cellulose), ஸ்டார்ச் (Starch), அல்ஜினேட் (Alginate), கைட்டோசான் (Chitosan), ஜெலட்டின் (Gelatin).

**ஹைட்ரோஜெல்கள் எப்படி வேலை செய்கின்றன?**

1. மண்ணில் கலந்து வைக்கப்படும் போது மழை அல்லது பாசன நீரை உறிஞ்சிக் கொள்கின்றன.

2. மண் உலரத் தொடங்கும் போது, சேமித்த நீரை மெதுவாக வெளியிட்டு தாவர வேர் பகுதிக்கு வழங்குகின்றன.

3. நீர் மட்டுமின்றி சில ஊட்டச்சத்துகளையும் தாவரங்களுக்கு வெளியிடும் திறன் உண்டு.

**செயல் முறையின் விளக்கம்**

**விவசாயத்தில் நன்மைகள்**

**1. நீர் சேமிப்பு**

● மழை நீர் அல்லது பாசன நீரை உறிஞ்சிக் கொள்கிறது

● வறட்சிக் காலங்களில் தாவரங்களுக்கு நீர் தொடர்ந்து கிடைக்கும்

● சிறப்பாக மணல் மண்ணில் (sandy soil) செயல்படுகிறது

**2. மண் ஈரப்பதம் நிலைத்தன்மை**

● மண் ஈரப்பதத்தை நீண்ட நேரம் நிலைநிறுத்தும்

● நீர் பாசன அடர்த்தி குறைவைக் கூட சமாளிக்கும்

**3. ஊட்டச்சத்து பாதுகாப்பு**

● உரங்கள் அல்லது உயிரி உரங்கள் (bio-fertilizers) வெளியேறுவதை (leaching) குறைக்கும்

● தாவரங்களுக்கு அதிக ஊட்டச்சத்து கிடைக்கும்

**4. பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சல்**

● ஈரப்பதம் சீராக கிடைப்பதால் வேர் வளர்ச்சி அதிகரிக்கும்

● பயிரின் உற்பத்தி திறன் உயர்கிறது

**5. சுற்றுச்சூழல் நன்மை**

● நீர் வீணாவதை குறைக்கிறது

● நிலத்தடி நீர் பாதுகாப்பிற்கு உதவுகிறது

● நிலையான விவசாயத்தை ஊக்குவிக்கிறது

## இந்திய சந்தையில் கிடைக்கும் ஹைட்ரோஜெல்கள்

### 1. Chemtex Alsta Hydrogel Polymer

● Potassium polyacrylate அடிப்படையிலான hydrogel

● தன் எடையை விட 500 - 600 மடங்கு நீரை உறிஞ்சும் திறன் உள்ளது

● விவசாயத்தில் நீர் சேமிப்பை அதிகரிக்க பயன்படுத்தப் படுகிறது

### 2. EF Polymer - Fasal Amrit Hydrogel

● இயற்கை மூலப்பொருட்களிலிருந்து உருவாக்கப்பட்ட hydrogel

● மண்ணில் நீர் மற்றும் உர பயன்பாட்டை குறைக்க உதவும்

### 3. Bombay Greens Hydrogel

● வீட்டுத் தோட்டம் மற்றும் சிறிய விவசாய பயன்பாட்டுக்கு

### 4. Acuro Magic Hydrogel Polymer

● மண்ணின் ஈரப்பதத்தை நீண்ட நேரம் பாதுகாக்க உதவும்

### 5. Kisanmart Premium Hydrogel

● தோட்டம், பண்ணை மற்றும் நர்சரி பயன்பாட்டிற்கு




**சவால்கள்**

**1. அதிக செலவு :** சில செயற்கை ஹைட்ரோஜெல்கள் விலை அதிகம்.

**2. சுற்றுச்சூழல் பாதிப்பு :** சில செயற்கை ஹைட்ரோஜெல்கள் நீடித்த காலம் முற்றிலும் உரியவாறு விநியோகிக்கப்படாமல் இருப்பது.

**3. பயன்பாட்டு அறிவு :** அளவு, கலப்பு முறைகள் தவறானால் நன்மை குறையும்.

**எதிர்கால வாய்ப்புகள்**

● இயற்கை ஹைட்ரோஜெல்கள் (Biodegradable) அதிகரித்து வருகின்றன, இது சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு சிறந்தது.

● **நுண்ணுயிர்கள் மற்றும் ஹைட்ரோஜெல் இணைப்பு :** உயிரி உரங்களுடன் இணைத்து பயன்படுத்துவதன் மூலம், நீர் மற்றும் ஊட்டச்சத்து இரட்டிப்பு நன்மை.

● **துல்லிய விவசாயம் (Precision Farming) :** நிலத்தடியில் ஹைட்ரோஜெல் அளவை கணினி மற்றும் சென்சார்களின் உதவியுடன் கண்டறிந்து மேற்பார்வை.

**முடிவுரை**

ஹைட்ரோஜெல்கள் விவசாயத்தில் "மண்ணின் நீர் வங்கி" ஆக செயல்படுகின்றன. நீரைச் சேமித்து, மண் ஈரப்பதத்தை நிலைத்தாக்குவதன் மூலம், வறட்சிக் காலங்களில் பயிர்களை காப்பாற்றுவதற்கு உதவுகின்றன. வேளாண் வேதியியல் துறையின் அறிவியல் முன்னேற்றங் களைப் பயன்படுத்தி, ஹைட்ரோஜெல்களை நவீன விவசாயத்தில் சரியான முறையில் சேர்த்தால், நீர் செயல்திறன் அதிகரிக்கும், பயிர் உற்பத்தி மேம்படும் மற்றும் நிலையான விவசாய வளர்ச்சி சாத்தியமாகும்.

தகவல் : *குளோரி.கே.எஸ், பிரசாத், உதவி பேராசிரியர்கள் (மண்ணியல் துறை) மற்றும் முனைவர் வி.கே பால்பாண்டி, கல்லூரி முதல்வர், கிருஷ்ணா வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை மாவட்டம்.*

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# பெரம்பலூர் மாவட்டத்திற்கு தேவையான உரங்கள் இருப்பில் உள்ளது

## வேளாண் துறை தகவல்



பெரம்பலூர், மார்ச் 26

பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது யூரியா 2449 மெட்ரிக் டன், டிஏபி 1406 மெட்ரிக் டன், பொட்டாஷ் 408 மெட்ரிக் டன், காம்ப்ளக்ஸ் உரம் 5338 மெட்ரிக் டன், சூப்பர் பாஸ்பேட் 541 மெட்ரிக் டன், இருப்பில் உள்ளது.

பெரம்பலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு டாக்டர் அக்ரி ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார்.

ஆய்வின்போது உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும்.

உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப் பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது. விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். தழைச்சத்துக்காக யூரியாவுக்கு பதிலாக நானோ யூரியா பயன்படுத்தலாம்.

வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

# கொப்பரை ரூ.4.29 லட்சத்துக்கு ஏலம்

திருப்பூர், மார்ச் 26

திருப்பூர் மாவட்டம், காங்கயம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் கொப்பரை ஏலம் நடந்தது. இதில் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து விவசாயிகள், 59 மூட்டை கொப்பரைகளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதில் குறைந்தபட்சமாக கிலோ ரூ.118.66க்கும், அதிகபட்சமாக ரூ.154.50க்கும் ஏலம் போனது. மொத்தம் 2,799 கிலோ எடையுள்ள கொப்பரை 4 லட்சத்து 29 ஆயிரத்து 280 ரூபாய்க்கு ஏலம் எடுக்கப்பட்டது என கூடத்தின் கண் காணிப்பாளர் அழகிரி சாந்தலிங்கம் தெரிவித்தார். 6 வியா பாரிகள் கலந்து கொண்டு கொள்முதல் செய்தனர்.



# மாவட்ட தொழில் மையம் (DIC) - ஒரு பார்வை

படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புக்காக கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்கி வேலை தேடிக் கொண்டிருப்பவராக இல்லாமல் சுயதொழில் புரிபவராக மாற வேண்டும் என்ற நோக்கத்தில் தொடங்கப்பட்டது தான் மாவட்ட தொழில் மையம் (டிக்) என்ற (DISTRICT INDUSTRY'S CENTRE).






இந்த மையங்களின் உதவியால் சுயதொழில் தொடங்கி முன்னேறியவர்கள் தமிழகத்தில் ஏராளம். சிறு மற்றும் குறு தொழில் (MSME) தமிழகத்தில் ஏராளமாக பெருகி இருப்பதற்கு மாவட்ட தொழில் மையங்களும் முக்கிய காரணமாகின்றன.

**மாவட்ட தொழில் மையத்தின் பணிகள் என்ன?**

படித்த இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்க உதவி தொகையுடன் (STIPEND) பயிற்சியை அளித்து வருவது குறிப்பிடதக்கது. பொது மேலாளர் தலைமையின் கீழ், இயங்கி வரும் மாவட்ட தொழில் மையமானது, புதிய தொழில் முனைவோருக்கு தேவையான பயிற்சியை வழங்குவதோடு தொழில் ஆலோசனைகளையும் வழங்குகிறது.

**இந்த மையத்தின் சிறப்பு அம்சம் என்றால் என்ன?**

தொழில் வளர்ச்சியின் தேவைக்கேற்ப செயல்படுவது மட்டுமல்ல, தொழிலை நவீன படுத்துவதற்கும் தொழில்நுட்ப தரத்தினை மேம்படுத்தவும் செயல் திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருகிறது.

வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதும் இந்த மையத்தின் சிறப்பு அம்சமாகும். இதன் மூலமாக படித்த இளைஞர்களை திசை மாறி செல்லாமல் வளர்ச்சியை நோக்கிப் பயணிப்பதற்கு வழிவகை செய்யப்படுகிறது.

**என்ன திட்டங்களை மாவட்ட தொழில் மையம் செயல்பட உதவுகிறது?**

1) படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

2) புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன வளர்ச்சித் திட்டம் (NEEDS)

3) பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

4) தொழில் முனைவோர்களுக்கு தேவையான தொழில் வழிகாட்டுதல்

5) பதிவு செய்தல் (UDYOG AADHAR) சேவைகளை வழங்குகிறது.

**வேலை வாய்ப்பு பெற படித்த இளைஞர்கள் என்ன செய்ய வேண்டும்?**

படித்த இளைஞர்கள் மாவட்ட தொழில் மையத்தை அணுகினால் தொழில் தொடங்க ஆலோசனை (EDP) திட்ட அறிக்கை (PROJECT PROFILE) இவை வழங்கப்படுவதோடு உரிய பயிற்சிக்கும் வழிவகை செய்யப்படுகிறது. சுயதொழில் செய்வதை ஊக்கப்படுத்தும் பணியை சிறப்பாக செய்கின்றன.

**மாவட்ட தொழில் மையம் எங்கெங்கு உள்ளது?**

மாவட்ட தொழில் மையம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ளது. அந்த அந்த மாவட்ட தலைநகரில் இம்மையம் அமைந்திருக்கும். அதுவும் மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அமைந்திருக்கும்.

எனவே இத்தகைய மாவட்ட தொழில் மையத்தை படித்த வேலையில்லாத இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW
isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID
BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# சூரிய சக்தி டிராக்டர் - ஒரு பார்வை



சோலார் டிராக்டர் என்பது மின்சார பேட்டரியில் இயங்கும் டிராக்டர். அது சூரிய சக்தி மூலம் சார்ஜ் செய்யப்படுகிறது. இது நேரடியாக சூரிய ஒளியால் இயங்குவதில்லை. சூரிய சக்தியால் சார்ஜ் செய்யப்பட்ட பேட்டரியில் இயங்கும் மின்சார டிராக்டர். சூரியன் பேட்டரியை சார்ஜ் செய்கிறது. பேட்டரி டிராக்டரை இயக்குகிறது.

**சார்ஜ் முறை**

- டிராக்டரிலேயே பொருத்தப்பட்ட சோலார் கனோபி மூலம்
- உங்கள் பண்ணையில் நிறுவப்பட்ட சோலார் பவரால்
- சூரிய சக்தி பெறாத சமயத்தில் ஒரு சாதாரண மின் இணைப்பால் கூட

**பயன்**

- இது எரிபொருள் செலவை குறைக்கிறது.
- சத்தத்தை குறைக்கிறது
- புகை வெளியீட்டை தவிர்க்கிறது.அதனால் நிலமும் பயிரும் பாதுகாப்பாக இருக்கும்.

**பராமரிப்பு எளிது**

இந்த டிராக்டர் குறுகிய இடங்களில் நகரும் திறனும் கொண்டது. மார்க்கெட் தோட்டங்களை பராமரிப்பதோ, நோ-டில் படுக்கைகளை தயார் செய்வதோ, குளிர்சாதன வீட்டிற்கு கம்போஸ்ட் எடுத்துச் செல்வதோ - எதுவாக இருந்தாலும் இது துல்லியத்துடன் வேலை செய்கிறது.

## நிலங்களுக்கு ஏற்ற காரணங்கள்

● **முறுக்கு செயல்திறன் :** மெல்லிய வரிசைகளிலும், டன்னல்களுக்கு நடுவிலும் இனிமையாக திரும்ப முடியும்.

● குறைந்த சத்தம் : கால்நடைகள், அயல் வீட்டார், குளிர்சாதன வீடுகள் – எவருக்கும் சிரமமில்லை.

● **ரீஜெனரேட்டிவ் (நோ–டில்) உடன் பொருந்தும் :** மண்ணை குறைவு குலைக்கும் முறைமைக்கு நல்ல பொருத்தம்.

● **மின்சார திறன் :** எரிபொருள் இல்லை, வெப்பமாக்கல் இல்லை, என்ஜின் அதிர்வு இல்லை.

| **அம்சம்** | **சோலார் டிராக்டர்** | **டீசல்/பெட்ரோல் டிராக்டர்** |
|---|---|---|
| அளவு & இயக்கம் | குறுகிய, சுறுசுறுப்பானது | சிறிய படுக்கைகளுக்கு பெரும்பாலும் அதிகம் |
| மண் தாக்கம் | குறைந்த கம்பாக்ஷன் | அதிக எடை, மண் அழுத்தம் |
| சத்தம் | மிகவும் அமைதி | மிக சத்தம் |
| ஆற்றல் | சோலார் சார்ஜ் மின்சாரம் | எரிபொருள் |
| பராமரிப்பு | குறைவு | அதிக பராமரிப்பு |

## தினசரி வேலைகள்

● **படுக்கை தயார் செய்தல் :** மண்ணை சரி செய்ய, வரிசைகளை உருவாக்க – அதிக சக்தியின்றி துல்லியம்.

● **விதைப்பு & களைகள் அகற்றுதல் :** உங்கள் சீடர், வீடர், கல்டிவேட்டர் – அனைத்தும் பொருந்தும்.

● **மல்சிங், அறுவடை, ஹாலிங் :** சரக்கு, புல், கருவிகள் – எல்லாம் இழுத்துச் செல்லும் திறன்.

● **கம்போஸ்ட் & கருவி எடுத்துச் செல்லுதல் :** வெப்பமான நாட்களிலும், மழை நாட்களிலும் உங்கள் முதுகை காப்பது.

## சேமிப்பு

● **எரிபொருள் :** சோலார் சார்ஜ் – இலவசம்.

● **ஆயில் & திரவங்கள் :** தேவையில்லை.

● **பராமரிப்பு :** குறைந்த பாகங்கள் = குறைந்த கோளாறு

● **டவுன் டைம் இல்லை :** எந்த பராமரிப்புக்கும் காத்திருக்க வேண்டாம்.

| **அம்சம்** | **சோலார் டிராக்டர்** | **டீசல் டிராக்டர்** |
| --- | --- | --- |
| *வெளியீட்டுகள்* | *பூஜ்யம்* | *அதிக $CO_2$, நச்சுக்கள்* |
| எரிபொருள் செலவு | இலவசம் | அதிகரிக்கும் |
| *சத்தம்* | *அமைதி* | *சத்தம்* |
| பராமரிப்பு | மிகக் குறைவு | அதிகம் |

● டீசல் புகை = மண் உயிரியல் பாதிப்பு

● அமைதி = கால்நடைகளும், அயல் வீட்டாரும் சுத்தமாக

● ஆஃப்-கிரிட் : சோலார் பேனல்/கேனபி போதும்

● பள்ளிகள், நகர தோட்டங்கள், பயிற்சி பண்ணைகள் : எளிதாக பயன்படுத்தலாம்

| **அளவுகோல்** | **முன்பு (டீசல்)** | **பிறகு (சோலார்)** |
| --- | --- | --- |
| *எரிபொருள் செலவு* | *₹120—150/மாதம்* | *₹0* |
| சத்தம் | அதிகம் | மிகக் குறைவு |
| *மண் கம்பாக்1சன்* | *அதிகம்* | *மிகவும் குறைவு* |
| பராமரிப்பு | 3-5 மணி/மாதம் | < 1 மணி |
| *சுரங்கப் படுக்கைகளில் காற்று* | *மோசம்* | *சுத்தம்* |

**பேட்டரி & சார்ஜிங்**



● பேட்டரி ரேஞ்ச் : 8 மணி வரை

● சாதாரண சார்ஜ் : 6 மணி (110V)

● வேக சார்ஜ் : 2 மணி (220V)

● சோலார் சார்ஜ் : கேனபி/அரையில் கிடைக்கும்

இந்தியாவில் பொதுவான சோலார்/சி-டிராக்டர் விலைகள் (2025)

● அடிப்படை 20-30 HP : ₹.5—8 லட்சம்

● 30 HP சோலார் : ₹.9 லட்சம்

● Autonxt X25H4 (25 HP): ₹.7.99 லட்சம்

● Hybrid (Sonalika Tiger) : விலை மாறுபடும்





கட்டுரை ஆசிரியர் : Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com

# காளான் விலை சற்று உயர்வு

கிருஷ்ணகிரி, மார்ச் 26

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் காளான் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் காளான்களை நேரடியாக உற்பத்தியாளர்களிடம் வியாபாரிகள் விலை பேசி மொத்தமாக வாங்கி சென்று மளிகை, பல்பொருள் அங்காடி, பேக்கரி கடைகளில் விற்பனை செய்கின்றனர்.

இதனை வியாபாரிகள் வாங்கி கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர். திருவிழா மற்றும் முகூர்த்த நாட்களில் காளானுக்கு மவுசு அதிகம் என்பதால், அதிகளவில் சமையலுக்கு காளான் தேவைப்படுகிறது. இதனால் கடை உரிமையாளர்கள், ஒரு பாக்கெட் ரூ.50க்கு விற்பனை செய்து வந்தனர்.

இந்நிலையில், முகூர்த்த சீசன் இல்லாததால் காளான் விற்பனை மந்தமாகி விலையும் நாளுக்கு நாள் குறைந்து, 5 பாக்கெட் ரூ.100க்கு விற்பனையானது. இந்நிலையில், தற்போது 3 பாக்கெட் காளான் ரூ.100க்கு விற்பனை செய்து வருகிறார்கள்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# பசுந்தாள் உரச் செடிகளின் விதைகளை பரிசோதனை செய்வீர்!

திண்டுக்கல், மார்ச் 26


மண்ணின் வளத்தை மேம்படுத்தும் பசுந்தாள் உரச் செடிகளின் விதைகளை பரிசோதனை செய்து விதைக்குமாறு திண்டுக்கல் விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் ப.பிரபாகரன் மற்றும் ம.ஜமுனாராணி ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறியதாவது : பெருகி வரும் மக்கட் தொகைக்கு ஏற்ப அனைவருக்கும் உணவளிக்கும் நோக்கில் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய அதிகளவில் வேதி உரங்களை பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இதனால் மண் வளம் சற்று குறைந்துள்ளது. இத்தகைய குறைந்த மண் வளத்தை மீட்டு எடுப்பதில் பசுந்தாள் உரங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த பசுந்தாள் உரங்கள் காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து மண்ணில் கிடைக்க செய்கின்றன.

சணப்பு, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி ஆகியவை முக்கிய பசுந்தாள் உரங்களாகும். இப்பயிர்களை விதைத்து 60 நாளில் அல்லது பூக்கும் பருவத்தில் மண்ணில் மடக்கி உழுவதால் மண்ணின் தன்மை மேம்படுகிறது. மண் அரிப்பு தடுக்கப் படுகிறது, மண்ணில் உள்ள நன்மை செய்யும் நுண்ணுயிர் களின் எண்ணிக்கை பெருகி பயிர்களுக்கு கிடைக்காத ஊட்டச் சத்துக்களை பயிர்களுக்கு எளிதில் கிடைக்கச் செய்கிறது. இத்தகைய பயிர்களின் விதைகளை விதைப்பதற்கு முன் நல்ல முளைப்புத்திறன் உள்ளனவா என்று பரிசோதனை செய்து விதைக்கவேண்டும்.

உதாரணமாக சணப்பு பயிருக்கு 80 சதவீதமும், தக்கைப்பூண்டு மற்றும் கொளுஞ்சி பயிருக்கு 75 சதவீதமும் முளைப்புத்திறன் இருக்க வேண்டும். இவற்றிற்கு குறைவாக முளைப்புத்திறன் இருக்கும் பட்சத்தில் அவை தரம் குறைவானவை ஆகும்.

முளைப்புத்திறன் பரிசோதனை மேற்கொள்ள 100 கிராம் விதையினை மாதிரி விதையாக எடுத்து, பரிசோதனை கட்டணமாக ரூ.80/- செலுத்தி அத்துடன் விதையின் இரகம், குவியல் எண் ஆகிய விவரங்களுடன் திண்டுக்கல் உழவர் மைய வளாகத்தில் உள்ள பரிசோதனை நிலையத்தில் சமர்ப்பித்து பரிசோதனை முடிவைப் பெற்று பயனடையலாம் என்று தெரிவித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நாட்டுக்கோழிகளின் கால் பாதங்களில் காணப்படும் "பம்பிள் ஃபுட்" எனப்படும் சீழ் கட்டிகள்

நாட்டுக்கோழி வளர்ப்பு கிராமப்புற விவசாயிகளுக்கு நல்ல வருமானம் தரும் தொழிலாக வளர்ந்து வருகிறது. குறைந்த முதலீட்டில் அதிக லாபம் பெறக்கூடிய இந்த தொழில், சரியான பராமரிப்பு இல்லாவிட்டால் நோய்களால் பெரும் நட்டத்தை சந்திக்க நேரிடும். நாட்டுக் கோழிகளில் பொதுவாக காணப்படும் ஒரு முக்கிய நோய் தான் "பம்பிள் ஃபுட்" எனப்படும் கால் பாதங்களில் காணப்படும் சீழ் கட்டியாகும். இது கோழிகளின் காலடியில் ஏற்படும் ஒரு வகையான தொற்று நோய் ஆகும். இந்த நோயை ஆரம்ப நிலையில் கண்டறியப்படாவிட்டால், கோழிகள் நடக்க முடியாமல் உடல் ஆரோக்கியம் கெட்டு இறக்கும் நிலைக்கும் கூடபோக நேரிடும்.

"பம்பிள் ஃபுட்" எனப்படும் சீழ் கட்டிகள் கோழிகளின் பாதங்களில் ஏற்படும் ஒரு வகையான பாக்டீரியா தொற்று நோய் ஆகும். கோழிகளின் பாதங்களில் சிறிய காயம் ஏற்பட்டால், அதில் பாக்டீரியா கிருமி புகுந்து நோய்த் தொற்றை ஏற்படுத்துவதால் பாதங்களில் வீக்கம், புண், கட்டிபோன்று உருவாகி கோழி நடக்க முடியாமல் அவதிப்படும்.

**நோய் ஏற்படும் முக்கியகாரணங்கள்**

**1. கூர்மையான பொருட்கள் :** கூர்மையான கற்கள், உடைந்த கண்ணாடித் துண்டுகள்,கம்பிகள், மரத்துண்டுகள், முற்கள் போன்றவற்றின் மீது கோழிகள் நடக்கும் போது காலடியில் சிறு காயங்கள் ஏற்படுவதன் மூலம் சீழ்க்கட்டிகள் ஏற்படலாம்.

**2. அசுத்தமான கூண்டுகள் :** கூண்டுகளை சுத்தம் செய்யாமல் வைத்தல் ,கோழிகளை அடைத்து வைக்கும் இடங்களில் கழிவுகள் தேங்குதல், ஈரப்பதம் அதிகரித்தல் ஆகிய காரணங்களால் கிருமிகள் வளர்ந்து காயங்களில் புகுந்து கிருமித் தொற்று ஏற்படுவதன் மூலம் சீழ்க்கட்டிகள் ஏற்படலாம்.

**3. கடினமான தரை :** கடினமான கான்கிரீட் தரை மற்றும் செங்கல் தரைகளில் கோழிகள் தொடர்ந்து நடப்பதால் காலடியில் அழுத்தம் ஏற்பட்டு புண்கள் ஏற்படுவதன் மூலம் சீழ்க்கட்டிகள் ஏற்படலாம்.

**4. அதிக உடல் எடை :** அதிக எடையுள்ள கோழிகளின் பாதங்களில் அதிக அழுத்தம் ஏற்பட்டு காயம் ஏற்படுவதன் மூலம் சீழ்க்கட்டிகள் ஏற்படலாம்.

**5. சத்துக் குறைபாடு :** விட்டமின் ஏ மற்றும் விட்டமின் ஈ, சுண்ணாம்புச் சத்துக் குறைபாடு காரணமாக பாதங்களில் உள்ள தோல் பலவீனமடைந்து எளிதில் காயம் ஏற்படுவதன் மூலம் சீழ்க்கட்டிகள் ஏற்படலாம்.

**அறிகுறிகள்**

கோழிகளின் பாதங்களில் வீக்கம் மற்றும் கருமையான புண், நடக்க சிரமப்படுதல், கால் நொண்டுதல், கோழிகள் நடக்க முடியாமல் படுத்தே இருத்தல், பாதங்களில் இருக்கும் புண்ணில் இருந்து சீழ் வெளியேறுதல், காலில் வலி, தீவனம் சரியாக உண்ணாமல் இருத்தல், உடல் எடை குறைதல்,சோர்வு மற்றும் முட்டை உற்பத்தி குறைதல், தகுந்த சிகிச்சை அளிக்காவிட்டால் காலின் எலும்பு வரை கிருமித் தொற்று பரவி இறப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

**சிகிச்சை**

ஆரம்ப காலத்திலேயே தகுந்த சிகிச்சை அளித்தால் குணப்படுத்துவது எளிது. பாதிக்கப்பட்ட கோழியை தனியாக பிரித்து பாதிக்கப்பட்ட பாதத்தை வெந்நீரில் நன்றாக கழுவி விட்டு பீடாடின் அல்லது டெட்டால் கலந்த நீர் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். பாதத்தில் இருக்கும் புண்ணை மெதுவாக அழுத்தி உள்ளிருக்கும் சீழை வெளியேற்ற வேண்டும். பிறகு ஆண்டிபயாட்டிக் களிம்பு மருந்தை தடவி விட்டு சுத்தமான துணியால் கட்டு போ டவேண்டும். இவ்வாறு சிகிச்சையை புண் ஆறும் வரை தினமும் செய்ய வேண்டும்.

புண்ணில் சீழ்க்கட்டி பழுக்காமல் மிகவும் கடினமாக இருந்தால் சிறிது மணல் அல்லது தவிடை வாணலியில் சூடு பண்ணி இதமான சூட்டில் தினமும் ஒத்தடம் கொடுக்க வேண்டும். ஒத்தடம் கொடுத்த பிறகு இக்தமால் கிளிசரின் மருந்தை வீக்கத்தில் தடவ வேண்டும். சீழ்க்கட்டி பழுத்த பிறகு சீழை வெளியேற்றிவிட்டு மருந்திட்டு கட்டுப்போட வேண்டும். சில சமயங்களில் கட்டியானது மிகவும் பெரிய அளவிலும் பாதிப்பு அதிகமாக இருந்தால் கால்நடைமருத்துவரைஅணுகி சீழ்க் கட்டியை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி சிகிச்சை அளிக்க வேண்டும்.

## தடுப்பு முறைகள்

கூண்டுகளில் கோழிகளை வைத்து வளர்த்து வந்தால் கூண்டுகளில் உள்ள கழிவுகளை தினமும் அகற்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

கோழிகளை வைத்திருக்கும் கொட்டகையில் சிமெண்ட் தரையில் நேரடியாக நடக்க விடக்கூடாது. உமி, நறுக்கிய வைக்கோல் அல்லது மரத்தூள் போன்ற ஆழ்கூளத்தை 2 அங்குலம் அளவு கொட்டகையின் தரையில் போட்டு அதன் மேல் கோழிகளை பராமரிக்க வேண்டும்.

சுற்றுப்புறத்தை சுத்தமாகவும், கூர்மையான பொருட்கள் தரையில் இல்லாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். கோழிகள் கால்களை நொண்டினால் உடனடியாக கால்களை பரிசோதித்து காயங்கள் ஏதும் இருந்தால் அலட்சியப்படுத்தாமல் உடனடியாக காயத்தை டெட்டால் கலந்த நீர் கொண்டுசுத்தப்படுத்தி காயங் களுக்கான களிம்பை தடவி தேவைப்பட்டால் கட்டு போட்டு சிகிச்சை மேற்கொள்ள வேண்டும்.

கோழிகளுக்கான தீவனத்தில் கால்சியம் டானிக் மற்றும் தாது உப்புக் கலவையை 2 சதவிகிதம் என்ற விகிதத்தில் கலந்து கொடுப்பதன் மூலம் சத்துக் குறைபாட்டை சரி செய்ய முடியும்.

கோழிகளின் பாதங்களில் ஏற்படும் சீழ்க்கட்டி நோயானது ஒரு சிறிய காயத்திலிருந்து உருவாகும் பெரிய பிரச்சனை என்பதால் சரியான பராமரிப்பு, சுத்தம் மற்றும் தகுந்த சிகிச்சையை மேற்கொண்டால் இந்த நோயை முழுமையாகத் தவிர்க்க முடியும்.

தகவல் : *முனைவர் இரா.உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங் குன்றம், மதுரை– 625 005.*




ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396